நான்காவது கூடுதல் சார்பு நீதிமன்றம், கோயமுத்தூர்

முன்னிலை: திருமதி.வி.ஏ.தமிழரசி, பி.ஏ., பி.எல்.,

நான்காவது கூடுதல் சார்பு நீதிபதி,

கோயமுத்தூர்.

**2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண். 1188/2023**

பார்த்திபன், த/பெ. லேட். காளிமுத்து, வயது 58 வருடங்கள், இந்து, வசிப்பிட முகவரி கதவு எண். 8/1F-1, மேகரவி தெரு, வெள்ளலூர் , கோயமுத்தூர் - 641 111.

... வாதி

**// எதிர் //**

ஆ.அபிநயா, த/பெ. ஆறுமுகம், வயது 41 வருடங்கள், இந்து, வசிப்பிட முகவரி கதவு எண். 11, தேவேந்திர தெரு மேற்கு, சிங்காநல்லூர் (அஞ்சல்), கோயமுத்தூர் - 641 005

... பிரதிவாதி

வாதிக்கு, பிரதிவாதி, தாவா தொகை ரூ.2,56,800/-க்கு வழக்கு தேதி முதல் தொகை செலுத்தப்படும் தேதி வரை 24% பின் வட்டியும் மற்றும் வழக்கு செலவுத் தொகையும் சேர்த்து செலுத்தக் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளளது.

தாவா தாக்கல் செய்யப்பட்ட நாள் : 31.08.2023

தாவா விஜய வழக்கு மூலம் : 13.09.2020. 04.02.2023. 09.02.2023 மற்றும் 24.02.2023 கோயமுத்தூர் மூலம் எழுந்துள்ளது.

வாதி கோரும் பரிகாரங்களுக்கு தாவா மதிப்பீடு ரூ.2,56,800/- இதற்குரிய தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் 22 ன் படியும் மற்றும் தாவா மதிப்பீடு சட்டப் படியும் ரூ.7,704/- நீதிமன்ற முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

## தாவா மதிப்பு விபரம்

| | | |
|---|---|---|
| பிராமிசரி நோட்டில் உள்ள மதிப்பு | - | ரூ.1,50,000/- |
| ரூ.1,50,000/-க்கு 13.09.2020 முதல் 31.08.2023 வரை 24 % வட்டியுடன் சேர்த்து | - | ரூ.1,06,800/- |
| மொத்தம் | - | ரூ.2,56,800/- |
| நீதிமன்ற கட்டணம் | - | ரூ.7,704/- |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 30.09.2024 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்து, வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.S.சையதுஅபாஸ், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதியை அழைத்தும் வருகையின்மையாலும், எவ்வித பிரதிநிதித்துவம் இல்லாததாலும் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டு, வாதி தரப்பு சாட்சியம் மற்றும் வழக்காவணங்களை ஆராய்ந்து இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும் தீர்ப்பாணை :-

1. பிரதிவாதி, வாதிக்கு வழக்கு தொகை ரூ.2,56,800/- ஐ செலுத்த வேண்டுமென்றும், அதில் அசல் தொகை ரூ.1,50,000/- ற்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதி வரை ஆண்டிற்கு 9% வட்டியும் மற்றும் தீர்ப்பு தேதியிலிருந்து தொகை முழுவதும் செலுத்தப்படும் வரை ஆண்டிற்கு 6% வட்டியும் மற்றும் வழக்குச் செலவுத் தொகையும், செலுத்தி வைக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது

2. மேலும் வழக்கு செலவுத் தொகையாக ரூ. 7,724 ஐ பிரதிவாதி, வாதிக்கு செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

**<u>செலவுத்தொகை பட்டியல்</u>**

| | | வாதி தரப்பில் | பிரதிவாதி தரப்பில் |
|---|---|---|---|
| தாவாவுக்கு ஸ்டாம்பு | ரூ. | ரூ.7,704.00 | |
| வக்காலத்து ஸ்டாம்பு | ரூ. | 10.00 | (தாக்கல் இல்லை) |
| பத்தா ஸ்டாம்பு | ரூ. | 10.00 | |
| மொத்தம் | ரூ. | 7,724.00 | |

(வாதி தரப்பில் செலவுப்பட்டியல் குறிப்பாணை தாக்கல் இல்லை)

2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ஆம் நாளாகிய இன்று என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இதனடியில் வைக்கப்பட்டது.

ஒம்/-வி.ஏ.தமிழரசி
நான்காவது கூடுதல் சார்பு நீதிபதி,
கோயம்புத்தூர்.

அ.வ.எண்.1188/2023

தேதி : 17.10.2024

தீர்ப்பாணை

அ.வ.எண்.1188/2023

தேதி : 17.10.2024